Apollo Sindoori
Excellence in Hospitality

6th February,2021

To,
Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th floor,
Bandra- Kurla Complex, Bandra(E),
Mumbai-400 051

Dear Sir/Madam,

Sub.: - Advertisement copies

Pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirement), please find enclosed copies of the extracts of unaudited Financial Results (Standalone and Consolidated)-Board Meeting dated 13th February, 2021 of Apollo Sindoori Hotels Limited (the "Company") for the quarter and nine months ended December 31, 2020 published in the following newspapers.

1.Business Standard dated 05.02.2021
2.Makkal Kural dated 05.02.2021

You are requested to take the above on record.

Thanking you.
Yours Sincerely,

For Apollo Sindoori Hotels Limited

Rupali Sharma
Company Secretary & Compliance Officer
Encl.: As above

Hospitality Catering Restaurants Management Services

Apollo Sindoori Hotels Limited
(Registered & Corporate Office)

43/5, Hussain Mansion, Greams Road,
Thousand Lights, Chennai - 600006.
P : +91 44 49045017, www.info@apollosindoori.com

CIN No.L72300TN1998PLC041360

Leisure travel revival lifts hotels' revenues

Cost-cutting initiatives by Indian Hotels, EIH help restrict losses

RAM PRASAD SAHU
Mumbai, 4 February

The December quarter (Q3) results of the largest hospitality stocks, Indian Hotels and EIH, indicate a sequential uptick in revenues led by a pick-up in the leisure segment. With the gradual pick-up in economic activity, the two companies reported a doubling of revenues over Q2.

The pace of revenue decline in the first two quarters, which was over 80 per cent, has slowed to 60 per cent as compared to the year-ago period.

The improvement was on the back of rising revenues per room, which was reflected in higher occupancies and average room rates. For Indian Hotels, overall revenues have recovered to 60 per cent of the year-ago levels, with revenue per available room in the domestic segment more than doubling to ₹2,573.

A large part of the gains comes from the rise in occupancies to 45.6 per cent in Q3 from 28.2 per cent in Q2. Room rates, too, rose by 50 per cent to ₹5,643 on a sequential basis. The company highlighted that most of the gains have come from leisure travel, with Goa reaching almost 80 per cent of the year-ago levels. Business travel, however, continues to be impacted with revenues still at 40 per cent or lower levels as compared to the year-ago period for cities like Bengaluru, National Capital Region, and Mumbai. EIH also indicated a 50 per cent increase in average room rates for Oberoi Leisure Hotels compared with the previous quarters. Sequentially, occupancy growth was led by Kerala in India and Dubai globally.

While Indian Hotels posted losses at the consolidated operating profit level, dragged down by international operations, cost-cutting initiatives helped it to turn profitable at the standalone level. Around 86 per cent of the company's domestic hotels are making money at the operating profit level. For EIH, the share of fixed and variable costs were down by 30-56 per cent as compared to the year-ago period.

The share of food and beverages (F&B) rose for both Indian Hotels and EIH. While room rents accounted for 50 per cent of EIH's revenues and F&B 37 per cent a year ago, the share of F&B rose to 55 per cent in Q3, while room rate share was down to 28 per cent. Indian Hotels' F&B share increased from 34 per cent in Q2 to 43 per cent in Q3.

Given the stress on the operational front, strong balance sheets would be critical if the top players are to ride out the pandemic and the cumulative losses they have been posting for the past three quarters. Rashesh Shah of ICICI Securities says EIH is best placed on the balance sheet front with the recent fundraise of ₹350 crore through a rights issue. At the end of Q3, the company's net debt stood at ₹250 crore and its net debt to equity ratio was a comfortable 0.08 times.

For Indian Hotels, its net debt stood at just over ₹3,079 crore, with leverage ratio at 0.71x. "While Indian Hotels has strong promoter backing, its debt/equity is 0.7x, which combined with capex requirement could lead to further rise in the leverage ratio to 0.9x if Covid persists for a longer period." Lemon Tree Hotels has strong institutional backing for liquidity support. However, it is in the capex mode and, hence, more leveraged than its peers.

Given the pressures on the business segment, investors should await a steady improvement in occupancies before considering the stocks.

ROOM FOR IMPROVEMENT

	Indian Hotels	EIH
Revenue (₹ crore)	**560**	**179**
% change YoY	–59	–65
Expenditure (₹ crore)	**577**	**206**
% change YoY	–39	–42
Ebitda (₹ crore)	**38**	**–11.2**
Net profit (₹ crore)	**–119**	**–55.8**

Source: Companies

TOUGH RECEPTION



VPF: Sheen diminished, but not lost

Only PPF and Sukanya Samriddhi offer higher returns among govt-backed schemes

BINDISHA SARANG

In the Budget for 2021-22, interest earned on contributions of above ₹2.5 lakh a year to provident funds was made taxable. While post-tax returns from Employee Provident Fund (EPF) or Voluntary Provident Fund (VPF) contributions of above ₹2.5 lakh will reduce, they still remain attractive compared to most other fixed-income instruments.

Better than most other govt schemes

Up to ₹2.5 lakh, employees will continue earning tax-free returns of 8.5 per cent. For contributions exceeding this amount, a person in the 30 per cent tax slab will earn a post-tax return of 5.85 per cent.

Only one government-backed instrument (open to all investors) gives returns higher than 5.85 per cent — the Public Provident Fund or PPF, which gives a 7.1 per cent return (tax-free).

The Sukanya Samriddhi Account (SSA) also offers a higher return of 7.6 per cent, which is tax-free on maturity. However, this is open only to people who have a girl child aged below 10 years.

Interest income from other government-backed instruments such as Senior Citizens Savings Scheme (pre-tax return 7.4 per cent), RBI Bonds (7.15 per cent), Kisan Vikas Patra (6.9 per cent), and National Savings Certificates (6.8 per cent) are all lower on both pre- and post-tax basis.

How should you invest?

Suppose that your annual contribution to EPF is below ₹2.5 lakh. "Subtract your mandatory contribution to EPF from ₹2.5 lakh. Whatever is the amount, contribute that to VPF so that your total contribution adds up to ₹2.5 lakh. After this, exhaust the ₹1.5-lakh limit in PPF," says investment and tax expert Balwant Jain. You will thus earn 8.5 per cent on your investment of ₹2.5 lakh and 7.1 per cent on the next ₹1.5 lakh. Hereafter, if you like (and if your liquidity requirements permit), you may invest more in VPF.

Any amount you contribute now will earn you a post-tax return of 5.8 per cent (30 per cent tax bracket).

PPF vs VPF

Besides return, how do these instruments compare on other parameters? Once PPF's 15-year tenure ends, you can keep extending it in blocks of five years. After the 15-year tenure, partial withdrawal is permitted: 60 per cent of the balance at the time of extension can be withdrawn over the next five years, with one withdrawal permitted each year. On the flip side, as Jain points out, you can invest only up to ₹1.5 lakh a year in PPF.

Your provident fund account will not be with you for your lifetime. It will become inoperative and stop earning interest three years after retirement.

Other options you may consider

Another retirement product you may consider is National Pension System (NPS). Its returns can be attractive (but not fixed) due to the equity component of investment and low charges. Mrin Agarwal, financial educator and director, Finsafe India says, "You also get a deduction of ₹50,000 under Section 80CCD (1B), over and above ₹1.5 lakh under Section 80C."

Those looking for an option where returns are not fixed, but which offers liquidity, may consider shorter-duration debt funds. "If you invest for more than three years and avail of indexation benefit, your post-tax return could be similar to that of VPF," says Sanjeev Govila, Sebi-registered investment advisor and chief executive officer, Hum Fauji Initiatives, a financial planning firm.

No retrospective application

Finally, one aspect needs to be clarified. News reports have suggested that this new rule—provident fund contributions above ₹2.5 lakh to be taxed at slab rate—could also be applied retrospectively. Central Board of Direct Taxes (CBDT) chairman P C Mody told *Business Standard* that there would be no retrospective application.

TAX LIABILITY IN THE NEW SCENARIO

Calculation is for a taxpayer who contributes ₹25,000/month to EPF/VPF

	Earlier (₹)	From April (₹)
Monthly contribution	25,000	25,000
Annual contribution	3,00,000	3,00,000
Interest earned @ 8.5%	25,500	25,500
Interest on ₹2.5 lakh	21,250	21,250
Taxable interest	NA	4,250
5% tax slab		213
20% tax slab		850
30% tax slab		1,275

Source: BankBazaar.com

Brookfield India REIT IPO subscribed 77% on Day 2

PRESS TRUST OF INDIA
New Delhi, 4 February

The initial public offering (IPO) of Brookfield India Real Estate Investment Trust (REIT) was subscribed 77 per cent on Thursday, the second day of subscription.

It received bids for 5,88,18,600 units against the 7,62,78,200 on offer, according to an update on the NSE. Institutional investors category was subscribed 53 per cent, while other investors portion 1.06 times. Brookfield India hit the capital market with its REIT public issue on Wednesday to raise up to ₹3,800 crore.

Investment firm Brookfield India's REIT on Tuesday raised ₹1,710 crore from anchor investors.

The IPO has a price band of ₹274-275 per share, and closes on February 5.

Brookfield REIT, the country's only 100 per cent institutionally managed public commercial real estate vehicle, is issuing units aggregating up to ₹3,800 crore.

The net proceeds from the public issue will be utilised for partial or full pre-payment or scheduled repayment of the existing debt of asset special purpose vehicles.

The units are proposed to be listed on the BSE and the NSE.

Brookfield REIT will be the third listed trust in India if it is successfully subscribed.

The first one Embassy Office Parks REIT, backed by Blackstone and Embassy group, got listed in April 2019 after raising a sum of ₹4,750 crore.

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

ரூ.24½ கோடியில் மண்டல புற்றுநோய் மையம்: முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்தார்

திருநெல்வேலி, கோவை, தஞ்சையில் ரூ.32 கோடி செலவில் மருத்துவக் கட்டிடங்களைத் துவக்கினார்

சென்னை, பிப்.5–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று (4–ந் தேதி) தலைமைச் செயலகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 கோடியே 35 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மண்டல புற்றுநோய் மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.

மேலும் 31 கோடியே 78 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ நேரியல் முடுக்கி கருவி நிறுவுவதற்காக 3 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கதிரியக்கவியல் புற்றுநோய் பிரிவு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அத்துடன் 26 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கருவிகளின் சேவையை துவக்கி வைத்தார்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்குதடையின்றி கிடைக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுதல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்கள் வாழும் பகுதிகளிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க 2 ஆயிரம் அம்மா மினி கிளினிக்குகள் ஏற்படுத்துதல், மருத்துவத்துறையில் தொழில்நுட்பவளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை அம்மாவின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் புற்றுநோயை துல்லியமாக கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக அம்மாவின் அரசால் 2013–14–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிகளில் 30 கோடி ரூபாய் செலவில் மண்டல புற்றுநோய் மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 24 கோடியே 35 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல புற்றுநோய் மையத்தை முதலமைச்சர் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார். இந்த மையத்தில், 4 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு, புற்றுநோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் 17 கோடியே 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ நேரியல் முடுக்கி கருவி நிறுவப்பட்டுள்ளது.

விழுப்புரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில்..

மேலும் இம்மையத்தில் எச்.டி.ஆர். மூச்சுக்குழாய் சிகிச்சை (brachytherapy), சி.டி. ஸ்டிமுலேடர் ஆகிய கருவிகள் 3 கோடியே 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. தென் தமிழகத்தில் முதன் முறையாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக் கூடிய உலகத் தரம் வாய்ந்த அதிநவீன கருவியான லினியர் ஆக்ஸிலேட்டர் நிறுவப்பட்டுள்ளது. இக்கருவி மூலம் மூளையில் சிறிய அளவில் பரவிய புற்றுநோய், தோல் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், வாய் புற்றுநோய், எலும்பு புற்றுநோய் மற்றும் அனைத்து புற்றுநோய்களையும் குணப்படுத்த முடியும்.

மேலும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் 3 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள "சி" மற்றும் "டி" பிரிவு பணியாளர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் 1 கோடியே 88 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசரகால சிகிச்சை மையம்;

பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் சார்பில், விழுப்புரம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 5 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை செவிலியர் மற்றும் மகப்பேறு தாதியம் பயிற்சிப்பள்ளிக் கட்டடம்; சென்னை, எழும்பூரில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை செவிலியர் மற்றும் மகப்பேறு தாதியம் பயிற்சிப் பள்ளி கட்டடம்; விழுப்புரம் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 1 கோடியே 23 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்;

கோயம்புத்தூர் மாவட்டம் இடிகரை, சோமையம்பாளைம் மற்றும் வடசித்தூர், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்கொடுங்கலூர், ஈரோடு மாவட்டம் கடம்பூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் பெத்தானூர், திண்டுக்கல் மாவட்டம் ரெங்கநாதபுரம், ராமநாதபுரம் மாவட்டம் மண்டலமாணிக்கம், விருதுநகர் மாவட்டம் எரிச்சநத்தம், தேனி மாவட்டம் பூதிப்புரம் மற்றும் திருவாரூர் மாவட்டம் வேலங்குடி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 6 கோடியே 90 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் நரசிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் குருமஞ்சேரி, திண்டுக்கல் மாவட்டம் பாப்பம்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் பெருநாழி மற்றும் புதுமடம், திருவாரூர் மாவட்டம் சங்கந்திஎடையூர், திருநெல்வேலி மாவட்டம் பணகுடி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கொள்ளுமேடு ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 4 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம் கும்பேஸ்வரம் தெற்கு மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

என மொத்தம் 31 கோடியே 78 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டடங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

லீனியர் ஆக்ஸிலேட்டர் கருவி

முதலமைச்சர் கடந்த 17.7.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், புற்றுநோய் சிகிச்சைக்காக சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு, நடப்பாண்டில் ஒரு லீனியர் ஆக்ஸிலேட்டர் கருவி 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்" என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பை நிறைவேற்றும் விதமாக, சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவவனையில் லீனியர் ஆக்ஸிலேட்டர் கருவி நிறுவிட, 3 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கதிரியக்கவியல் புற்றுநோய் பிரிவு கட்டடம் கட்டுவதற்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

மேலும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நேரியல் முடுக்கி (Linear Accellarator), தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 5 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள கேத் லேப் மற்றும் சி.டி. ஸ்கேன் கருவி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள கேத் லேப் கருவி, ஆகிய மருத்துவக் கருவிகளின் சேவையை முதலமைச்சர் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் வி.எம்.ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குனர் பி.உமாநாத், மருத்துவக் கல்வி இயக்குநர் ஆர். நாராயணபாபு, பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குனர் செல்வ வினாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் 7 மாதங்களுக்கு பிறகு 500க்கு கீழ் குறைந்த கொரோனா பாதிப்பு

சென்னை, பிப்.5–

தமிழகத்தில் 7 மாதங்களுக்குப் பிறகு 500க்கும் குறைவாக கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று புதிதாக 494 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது.

இது குறித்து மாநில சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தில் நேற்று புதிதாக 494 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அதிகபட்சமாக சென்னையில் 149 பேர் பாதிக்கப்பட்டனர். இதுவரை தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8 லட்சத்து 40 ஆயிரத்து 360 ஆக உள்ளது.

தொற்று உள்ளவர்கள் எண்ணிக்கையில் ஆண்கள் 5 லட்சத்து 7 ஆயிரத்து 889 பேர். பெண்கள் 3 லட்சத்து 32 ஆயிரத்து 437 பேர். மூன்றாம் பாலினத்தவர் 34 பேர் ஆகும்.

கொரோனா சிகிச்சை முடிந்து நேற்று 517 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை 8 லட்சத்து 23 ஆயிரத்து 518 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர். தற்போது 4 ஆயிரத்து 467 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பால் நேற்று 4 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 375 ஆக அதிகரித்துள்ளது. சென்னையில் மட்டும் இதுவரை மொத்தம் 4,111 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது 68 அரசு ஆய்வகங்கள், 186 தனியார் ஆய்வகங்கள் என 254 ஆய்வகங்களில் நேற்று ஒரே நாளில் 51 ஆயிரத்து 882 கொரோனா பரிசோதனை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 1 கோடியே 62 லட்சத்து 28 ஆயிரத்து 801 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் இதுவரை 1 லட்சத்து 45 ஆயிரத்து 650 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கல்லூரிகள் வாரத்திற்கு 6 நாட்கள் செயல்படும்: தமிழக அரசு அரசாணை

சென்னை, பிப்.5–

8–ந்தேதி முதல் திறக்கப்படும் கல்லூரிகள் இந்த கல்வியாண்டு முழுவதும் வாரத்திற்கு 6 நாட்கள் செயல்படும் என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் பாதிப்பு குறைய துவங்கியதை அடுத்த ஆராய்ச்சி மாணவர்கள், முதுநிலை மற்றும் இளநிலை இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு டிசம்பர் மாதம் கல்லூரிகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில் கலை, அறிவியல், தொழில்நுட்ப, பொறியியல், வேளாண்மை, மீன்வளம், கால்நடை உள்ளிட்ட அனைத்து கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இளநிலை, முதுநிலை படிப்புகளுக்கான (பட்டயப் படிப்பு உட்பட) அனைத்து வகுப்புகளும் 8–ந்தேதி முதல் திறக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, கல்லூரிகள் வழிகாட்டுதல் நெறிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் என்றும், கல்லூரிகளில் கிருமிநாசினி வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு கல்லூரிகள் திறப்பதில் கூடுதல் தாமதம் ஏற்பட்டதால், 8–ந்தேதி முதல் திறக்கப்படும் கல்லூரிகள் வாரத்தில் 6 நாள்களும் செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த கல்வியாண்டு முழுவதும் கல்லூரிகள் வாரத்திற்கு 6 நாட்கள் செயல்படும் என தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தை, கழக அமைப்புச் செயலாளரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சருமான டாக்டர் சி. விஜயபாஸ்கர் குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து, 6.2.2021 அன்று நடைபெறவுள்ள தனது மகளின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை வழங்கினார்.

கியாஸ் சிலிண்டர் விலை ரூ.25 உயர்வு: சென்னையில் ரூ.735க்கு வினியோகம்

சென்னை, பிப்.5

சென்னையில் சமையல் கியாஸ் சிலிண்டர் விலை ரூ.25 உயர்ந்து ரூ.735க்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை, இறக்குமதி செலவு, அமெரிக்கா டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவற்றை கணக்கிட்டு சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலையை மாதத்திற்கு ஒரு முறை முதல் தேதியில் எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்பு நிர்ணயித்து வருகின்றன.

அந்தவகையில் நடப்பு மாதம் முதல் தேதியில் வீட்டு சிலிண்டர்களுக்கான விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக சிலிண்டர்களின் விலை சென்னையில் ரூ.91 அதிகரித்து ரூ.1,649 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

வீட்டு சிலிண்டர்கள் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. இந்த நிலையில் நேற்று வீடுகளுக்கு வினியோகிக்கப்பட்ட 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக மானியமில்லாத சிலிண்டர் விலை ரூ.25 விலை அதிகரிக்கப்பட்டு இருந்தது. இதனால் கடந்த மாதம் ரூ.710க்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் ரூ.735க்கு வினியோகிக்கப்பட்டது.

சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு கடந்த மாத இறுதியில் இருந்து மானியமாக ரூ.24 மட்டுமே வந்து உள்ளது. ஒரு சிலருக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் மானியமே வரவில்லை என்ற நிலையும் இருந்து வருகிறது. எண்ணெய் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு வங்கி கணக்கில் மானியம் முறையாக செலுத்தப்படுகிறதா? என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்றும் இல்லத்தரசிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.